DEPOSITION OF WITNESS

Judicial Form No. 53

(See Rule 42)

(Chapter XXIII Code of Criminal Procedure)

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, No.I, UDUMALPET**

| | | |
|---|---|---|
| Calender | : | CC No.436/2025 |
| Miscellaneous | : | |
| Preliminary Register | : | |
| Sessions | : | |
| Deposition of Witness for Prosecution | : | L.W.1 P.W.2 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | கொங்கு ராஜ் | தொழில் | : | |
| தகப்பனார் பெயர் / கணவர் பெயர் | : | | ஜாதி | : | |
| கிராமம் | : | | இனம் | : | |
| தாலூக்கா | : | | வயது | : | |
| Mail ID | : | | Mobile No. | : | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969, (Central Act 44 of 1969) on 09.03.2026.

**எதிரிகள் ஆஜர்**

**முதல் விசாரணை**

நான் தற்போது குடிமங்கலம் காவல் நிலையத்தில் காவல் சிறப்பு உதவி ஆய்வாளராக பணியில் இருந்து வருகிறேன். இதற்கு முன் அமராவதி நகர் தலைமை காவலராக பணியில் இருந்த போது கடந்த 27.07.2025 ம் தேதி உதவி ஆய்வாளர் சண்முக மூர்த்தி உடன நானும் முதல் நிலை காவலர் முத்துகுமார் என்பவருடன் தயார் செய்தார் அரசு அனுமதியின்றி சட்ட விரோதமாக மது பாட்ல்கள் விற்பனை செய்வது தடுக்கும் பொருட்டு ரோந்து போகும் போது காலை 9.30 மணியளிவல் தும்பலப்பட்டி கிழக்கு தோட்டம் அருகில் கண்காணித்த போது இரண்டு நபர்கள சந்தேகப்படுமபடியாக நின்று கொண்டிருந்தவர்களை பிடித்து விசாரித்த போது சிவகுமார் மற்றும கோபால் என்பவர்களை பிடித்து விசாரித்து போது 1 லிட்டர் பாட்டில் அளவில் 4 பாட்டில்கள் மற்றும ஒரு மண் பானை வைத்திருந்தார்கள். அதில் தென்னை மரத்துக்கள் இருந்தது. அந்த கள்ளை வியாபாரத்திற்காக வைத்திருந்ததாக சொன்னார். பின்னர் உதவி ஆய்வாளர் இருவரையும் கைது செய்து 4 லிட்டர்கள் மற்றும பை –1 ஐ கைப்பற்றினார் பொது ஜன சாட்சிகள் யாரும் இல்லாததால் நானும்

முத்துகுமாரும் கையொப்பம் செய்தோ. பின்னர் கைப்பற்றப்பட்ட பொருட்களை அழித்து உதவி ஆய்வாளர் அழித்தல் மகசர் தயார் செய்தார். அதில் நானும் முத்துக்குமாரும் சாட்சி கையொப்பம் செய்தோம். என்னிடம் காட்டப்படும் கைப்பற்றுதல் உள்ள முதலாவது கையெழுத்து என்னுடைய தான். என்னிடம் காட்டப்படும் அழித்தல் மகசரில் உள்ள 1 வது கையெழுத்து என்னுடையது தான். அதன் பிறகு எதிரியை நிலையம் ஆஜர் செய்து உதவி ஆய்வாளர் நிலைய குற்ற எண் 83/ 2025 பிரிவு 4(1)(C) TNP ன் படி முதல் தகவல் அறிக்கை தயார் செய்தார். பின்னர் எதிரிகளை தக்க இருநபர் ஜாமினில் விடுவித்தார். அவருக்கு உதவியாக நாங்கள் இருந்தோம்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

1. எத்தனை மணிக்கு நீங்கள் கிளம்பினீர்கள் என்றால் காலை 9 மணி. நோன்புக்கு செல்லும் பொழுது புது நாட்குறிப்பு பதிவு செய்வது வழக்கம் என்றால் இல்லை. நீங்கள் காவல் நிலையத்திலிருந்து வெளியே செல்லும்போது எதில் பதிவு செய்வீர்கள் என்றால் நாங்கள் பதிவு செய்ய மாட்டோம் உயர் அதிகாரிகள் சொன்னதன் நான் சொன்ன போதும் செய்வோம். காவல் நிலையம் வந்தால் சீரு சீருடைகள் வரவேண்டும் என்றால் ஆமாம். அன்றயை தினம் சீருடைகள் வரவில்லை என்றால் ஆமாம். உதவி ஆய்வாளர் சிவில் ஆடையில் வர சொன்னார். உங்களை உதவி ஆய்வாளர் விசாரிக்கும் பொழுது சீருடை வர வேண்டாம் என சொன்ன சங்கதியை சொல்லியுள்ளீர்களா என்றால் இல்லை.
2. ரோந்து எந்தெந்த வழியாக சென்றீர்கள் என்றால் செக்போஸ்ட் வழியாக தம்புரான் கோவில் வழியாக தும்பலப்பட்டி சென்றோம். பஸ் ஸ்டாண்ட் சென்றீர்களா என்றால் இல்லை உதவி ஆய்வாளருக்ககு தகவல் கிடைத்து தும்பலப்பட்டி கிழக்கு தோட்டம் போக மூவிங் சென்றோம். தும்பலப்பட்டியிலிருந்து கிழக்கு தோட்டம் என்பது எவ்வளவு தூரம் என்றால் அது பற்றி தெரியவில்லை. கிழக்கு தோட்டம் என்பது யாருக்கு சொந்தமான தோட்டம் என்பது குறித்து விசாரித்தீர்களா என்றால் நான் விசாரிக்கவில்லை. உதவிஆய்வாளர் விசாரித்தாரா என்ற விவரம் உங்களுக்கு தெரியுமா என்றால் தெரியாது.
3. நீங்கள் சென்ற பொழுது எத்தனை நபர்கள் அங்கு இருந்தார்கள் என்றால் இரு நபர்கள். வேறு யாரும் அங்கு இல்லை என்றால் ஆமாம். அது ஆள் நடமாட்டம் இல்லாத ஒரு தோட்டம் என்றால் சரி அல்ல. அங்கு ஆள் நடமாட்டம் இருந்ததா என்றால் அந்த நேரத்தில் யாரும் இல்லை. துணிப்பை என்று சொல்லி உள்ள நிலையில் அதை

என்ன கலர் பை என்றாலும் என்னை எழுதப்பட்டிருந்தது என்றாலும் தெரியவில்லை. பாட்டில்கள் – 4 என்று என்று சொல்லி உள்ள நிலையில் அது பிளாஸ்டிக் பாட்டிலா அல்லது கண்ணாடி பாட்டிலா என்றால்அது தெரியாது. அந்த பாட்டில்களை நீங்கள் பார்க்கவில்லையா என்றால் பாட்டிலை பார்த்தேன் என்ன பாட்டில் என்று தெரியாது.

4. பொதுவாக ரோந்திற்கு செல்லும் பொழுது என்னென்ன எடுத்துச் செல்கிறீர்கள் என்றால் உதவி ஆய்வாருக்கு உதவியாக செல்லும் பொழுது எதுவும் எடுத்து செல்வதில்லை. உதவி ஆய்வாளர் என்ன எடுத்துச் சென்றார் என்று தெரியுமா என்றால் தெரியாது. கையில் பீட் புக் போன்ற ஆவணங்கள் இருந்ததா என்றால் உட்பட்ட பேராவணங்கள் இருந்ததா என்றால் நான் எதோ எடுத்துச் செல்லவில்லை உதவி ஆய்வாளரிடம் இருந்தது பற்றி தெரியாது
5. கைப்பற்றுதல் மகசர் மற்றும் அழித்தல் மகசர் காவல் நிலையத்தில் வைத்து கையெழுத்து போட்டீர்கள் என்றால் இல்லை. துமபலப்பட்டி பள்ளி மற்றும் விஏஓ அலுவலகம் பஞ்சாயத்து அலுவலகம் அருகில் உள்ளது என்றால் ஆமாம். பொது ஜன மக்கள் இல்லை என்பதால் அருகில் உள்ள அரசு அதிகாரிகளை சாட்சியாக இருக்க அழைக்கவில்லை என்றால் அது பற்றி தெரியாது. எதிரிகள் மற்றும் காவலர்கள் தவிர மற்றுவேறு யாரும் இல்லாத நேரத்தில் தான் அழித்தல் மகசர் தயாரிக்கப்பட்டது என்றால் சரிதான். நீங்கள் எத்தனை வருடம் காவலராக பணி புரிகிறீர்கள் என்றால் 27 வருடம். காவல் துறையினர் விதியின் படி காவல் ஆய்வாளர் மற்றும் அதற்கு மேல் உள் அதிகாரிகள் தான் அழித்தல் மகசர் தயார் செய்ய வேண்டும் என்ற விபரம் தெரியுமா என்றால் தெரியாது.
6. பானை கைப்பற்றியதாக சொல்லியுள்ளநிலையில் என்ன கலர் பானை என்றால் மண்பானை. மண்பானையில் பல நிறங்கள் உள்ள நிலையில் என்ன கலர் பனை என்றால் சரியாக ஞாபகமில்லை . எதிரிகள் வைத்திருந்தது கள் என்று யார் முடிவு செய்தார்கள் என்றால் உதவி ஆய்வாளர் தான் முடிவு செய்தார். நீங்கள் மதுவிலக்கு சம்பந்தமாக பிரிவில் எத்தனை வருடங்கள் இருக்கிறீர்கள் என்றாலும் தனியாக பயிற்சி எடுத்துள்ளீர்களா என்றாலும் இல்லை. பொதுவாக கள் போன்று வாசனை உடைய புளித்த தயிர், புளித்த மாவு, கெட்டு போன பதநீர் ஆகியவை கள் போன்று இருக்கும் என்றால் அது பற்றி தெரியாது.
7. வழக்கில் போட்டோ எடுக்கப்பட்டதா என்றால் தெரியாது. உஙகளை யார் புகைப்படம் எடுத்தார்கள் என்று விவரம் தெரியாது

என்றால் ஆமாம். கள்ளை கீழே கொட்டின நிலையில் பானை மற்றும மாட்டேன் துணிப்பை போன்றவற்றை கைப்பற்றி வழக்கல் தாக்கல் செய்யவில்லை என்றால் அது பற்றி தெரியாது. சொன்ன மாதிரி சொன்ன தேதியில் சம்பவம் நடைபெறவில்லை என்றாலும் புள்ளி விவர கணக்கிற்காக போடடப்பட்ட பொய்யான வழக்கு என்றாலும் சொன் னதேதியில் சொன்ன இடத்தில் எதிரிகள் கள் விற்பனை செய்யவில்ல என்றாலும் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது.

Sd/- T.Nithyakala , B.Com.,B.L.,
நீதித்துறை நடுவர் எண்.1
உடுமலைப்பேட்டை.